OS. 07/2021

நாள். 26.09.2024.

பி.சா. 2 – ஸ்ரீதரன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:–</u>

நான் கமுகூரணி கிராமத்தில் சுமார் 20 வயதுவரை இருந்தேன். அதன் பிறகு சென்னையில் வசித்து வருகிறேன். கமுகூரணி கிராமம் மாரியம்மன் கோவில் தெரு கதவு எண்.5/145–ல் நான் தற்போது வசித்து வரவில்லை. வந்தால் இந்த வீட்டில் தங்குவேன். என் ஆதார் அட்டையில் சென்னை முகவரி இருக்கிறது. (சாட்சி அவரது ஆதார் அட்டையை எடுத்து காட்டுகிறார் அதில் திருவள்ளுர் மாதவரம் முகவரி இருக்கிறது.) என்னுடைய பொண்டாட்டி பிள்ளைகள் சென்னையில்தான் வசிக்கிறார்கள். நான் ஆவின் பால்பண்ணையில் வேலை பார்த்து 2015–ல் ரிட்டையர் ஆகிவிட்டேன். பால்பண்ணையில் மெயின்டனன்ஸ் வேலை, பால் கணக்கு எழுதுகிற வேலை, பால்வண்டி செக் செய்கிற வேலை ஆகியவற்றை பார்த்து வந்தேன். அங்கு மூன்று சிப்ட் வேலை நடக்கும். சிப்ட் படி வேலைக்கு போகவேண்டும். மூன்று சிப்டும் மாறிமாறி வரும். 02.09.1989 அன்று நான் எந்த சிப்டுக்கு வேலைக்கு போனேன் என்று ஞாபகமில்லை. சுந்தர்ராஜன் என்னை வரச்சொன்னார். அதனால் நான் சென்னையிலிருந்து வந்தேன். சுந்தர்ராஜன்தான் என்னை நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். சுந்தர்ராஜன் எனக்கு 40 வருடங்களுக்கு மேலாக தெரியும். ஊர்க்காரர் என்பதாலும், அடிக்கடி டீக்கடையில் பார்த்து பேசி வந்ததாலும் அவர் எனக்கு பழக்கம். அவர் சென்னையில் பெரியமாத்தூர் என்ற இடத்தில் குடியிருந்தார். அந்த தெருப் பெயர் எனக்கு தெரியாது. நான் இருக்கும் இடத்திற்கு அருகில் அவர் சுமார் அரை கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தார். சுந்தர்ராஜன் கூடப்பிறந்தவர்கள் பெயர் எனக்கு தெரியாது. ராக்கம்மாள் பெயர் மட்டும் தெரியும். நான் என் பெயரில் சொத்து எதுவும் கிரையம் வாங்கவில்லை. சொத்து வாங்க வேண்டும் என்றால் பத்திரம் எழுதி பதிவு அலுவலகத்தில் பதிவு செய்து கிரையம் வாங்க வேண்டும் என்பது எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணம் சென்னை உயர்நீதிமன்றத்தில் வராண்டாவில் உள்ள இடத்தில் டைப் அடிக்கப்பட்டது. (சாட்சியின் முதன்மை

விசாரணை வாக்குமூலம் நகல் காட்டி கேள்வி கேட்கப்பட்டது.) வக்கீல் சீனிவாசன் என்பவர் அங்கு வராண்டாவில் இருந்த ஒருவரிடம் உதவியாளர் மூலம் டைப் செய்து அந்த ஆவணத்தை எடுத்து வந்து கொடுத்தார். அது பத்திரத்தில் டைப் செய்யப்பட்டிருந்தது. (சாட்சியிடம் மறுபடியும் சாட்சியின் முதன்மை விசாரணை வாக்குமூலம் நகல் காட்டி கேள்வி கேட்கப்பட்டது) இது அது கிடையாது. இது இப்போது நான் கோர்ட்டில் டைப் அடித்துக் கொடுத்தது. (சாட்சி முதன்மை விசாரணை வாக்குமூலம் நகலை முழுவதுமாக படித்துப்பார்த்துவிட்டு பதில் சொன்னார்.) இராமநாதபுரம் அரண்மனைக்கு பக்கத்தில் உள்ள சந்தில் இதை டைப் அடித்தார்கள். நானும், சுந்தர்ராஜனும் டைப் அடிக்கப்போனோம். நான் அபிடவிட் தாக்கல் செய்யவேண்டும் என்று சுந்தர்ராஜன் சொன்னார். அவர் சொல்லசொல்ல இந்த அபிடவிட் டைப் செய்யப்பட்டது. 02.09.1989 தேதிக்கு முன்பாக வழக்கறிஞர் சீனிவாசன் என்பவரை எனக்கு தெரியாது. அந்த தேதிக்கு பிறகும் நான் அவரை பார்த்தது கிடையாது. அவர் நோட்டரி வக்கீலா என்று எனக்கு தெரியாது. ஆனால் அவர் வேறுஒருவரிடம்தான் சீல் போட்டார். நோட்டரி அந்த வராண்டாவில் இருந்த டேபிள்சேரில் இருந்தார். அந்த வராண்டாவில் ஒரு நான்கு, ஐந்து நோட்டரிகள் இருந்தார்கள். எந்த நோட்டரியிடம் சீனிவாசன் வக்கீல் சீல் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. பத்திரம் சம்மந்தப்பட்ட வேலைகளை சீனிவாசன் வக்கீல்தான் செய்தார். 02.09.1989 அன்று தயாரிக்கப்பட்ட பத்திரத்தை அதன் பிறகு நான் பார்க்கவில்லை. மாரியம்மாள் என்று எனக்கு யாரையும் தெரியாது. மாரியம்மாள் என்பவர் எனக்கு முன்னால் கையெழுத்து போட்டுக்கொடுக்கவில்லை. 02.09.1989 அன்று எழுதப்பட்டதாக கூறும் பாகவிடுதலைப்பத்திரம் 1–ஆம் பிரதிவாதி சுந்தர்ராஜனால் உற்பத்தி செய்யப்பட்ட பத்திரம் என்றும், அவருடைய நெருங்கிய நண்பர் என்பதால் நான் அவருக்காக பொய்சாட்சியம் சொல்லுகிறேன் என்று சொன்னால் சரிதான். நான் சொன்னது மாதிரி நான் சொன்ன பத்திரத்தில் ராக்கம்மாள் கையெழுத்து எதுவும் போடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**